www.Padasalai.Net

பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள்,

சென்னை-600 006.

ந.க.எண் 29168/இ/இ2/2024, நாள் 27.06.2024.

பொருள் பள்ளிக் கல்வி -2024-2025ம் கல்வியாண்டில் அனைத்துவகை பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவிகளுக்கு பேருந்து பயண அட்டை வழங்குதல் - EMIS தளத்தில் பதிவு செய்தல் தொடர்பாக.

பார்வை 1. அரசாணை எண் 2222 போக்குவரத்துத்துறை, நாள் 08.05.1990.

2. அரசாணை எண் 135 போக்குவரத்துத்துறை, நாள் 20.05.2004.

---

2024-2025ம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித்துறையில் அனைத்துவகை பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவிகளுக்கு வழங்கப்படும் பேருந்துப் பயண அட்டை விண்ணப்பிக்க EMIS தளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் வகுப்பாசிரியர்களுக்கு EMIS தளத்தில் உள்நுழைவு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளமையால் மாணவர்களுக்கு பேருந்துப் பயண அட்டை விண்ணப்பிப்பதற்கு அதற்குரிய கடவுச் சொல்லைப் பயன்படுத்தி உடனடியாக விண்ணப்பிக்கும் பணியினைத் தொடங்கப்பட வேண்டும்.

பேருந்து பயண அட்டை விண்ணப்பிக்கும் பணியினை உயர் தொழில்நுட்ப ஆய்வகப் பயிற்றுநர் (AI) மற்றும் ஆய்வக உதவியாளர்களைப் பயன்படுத்தி இப்பணியினை 1 வார காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

இப்பணியினை உடனடியாக செய்து முடிக்க அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

பள்ளிக் கல்வி இயக்குநர்.

27/6/24

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தொடக்கக் கல்வி)